# பாடம் 6: படைப்பு
# (முதல் பெற்றோருடனான உடன்படிக்கை)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

| | |
|---|---|
| அடிப்படை நிலை (7 வயது) | : 1 முதல் 5 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| இடைப்பட்ட நிலை (10 வயது) | : 1 முதல் 6 கருத்துகளைக் கற்பிக்கவும் |
| மேம்பட்ட நிலை (13 வயது) | : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும் |

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், கடவுள் காணப்படாத உலகோடு படைப்பைத் தொடங்கினார், அங்கு வானதூதர்களின் நடுவே கிளர்ச்சி தோன்றியது ஏனெனில் அவர்களில் பலர் கடவுளின் படைப்புத் திட்டத்தை எதிர்த்தனர் என்பதை நாம் கற்றோம். இந்த வானதூதர்களே தொடர்ந்து வீழ்ச்சியுற்று அலகைகள் அல்லது பேய்களாக ஆயினர். இந்த பாடத்தில், காணப்படும் உலகைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. கடவுள் காணப்படாத உலகைப் படைத்தப் பிறகு, அவர் காணப்படும் உலகைப் படைத்தார் அதுவே பொதுவாக பிரபஞ்சம் என்று அறியப்படுகிறது.

2. தொடக்க நூல் 1:1-2:3 பகுதியை வாசித்து மாணவர்களுக்கு விளக்கவும். பொருள்சார் உலகைப் படைக்க கடவுள் “ஆறு நாட்கள்” எடுத்துக் கொண்டார் என்று மறைநூல் நமக்கு கூறுகிறது.

3. அவரது படைப்புகளில் சிறந்ததாக இருந்தவர்கள் மனிதர்களே. கடவுள் படைத்த முதல் மனிதர்கள் ஆதாம் மற்றும் ஏவாள். ஆதாம் என்றால் எபிரேயத்தில் “மனிதன்” என்று பொருள். “உயிருள்ள அனைவரின் தாய்” என்பதால் ஏவாள் அவ்வாறு பெயரிடப்பட்டாள் (ஏவாள் என்பதன் எபிரேய வார்த்தை *கவ்வா*, அது “வாழ்தல்” என்பதற்கு நிகரான வார்த்தை). மனிதர்கள் தமது உருவத்திலும் சாயலிலும் கடவுள் படைத்த மிக உயர்ந்த கலைப்பொருள் என்பதால், மற்ற வாழும் படைப்புயிரிகளுக்குப் பெயரிட ஆதாமை கடவுள் அனுமதித்தார்.

4. கடவுள் அவரை அறியவும், அவரை அன்பு செய்யவும், அவருக்குப் பணி புரியவும், என்றென்றும் அவரோடு மகிழ்ச்சியாக இருக்கவும் நம்மைப் படைத்தார். கடவுளின் மாட்சிக்காக நாம் படைக்கப் பெற்றிருக்கிறோம் (கதிம 293). யூகேட்டின் இரண்டாம் கேள்விக்கான பதில் கூறுகிறது, “அவரது ‘மிகையான’ அன்பில் இருந்து அவர் நம்மைப் படைத்தார். அவரது அன்பின் படைப்புயிரிகளான நம்மோடு தமது முடிவற்ற அக்களிப்பைப் பகிர்ந்திட அவர் விரும்பினார்.”

கதிம 1: “தம்மிலே முடிவற்ற நிறைவானவரும் பேறுநிறைந்தவருமான கடவுள், முழுமையான நன்மைத்தனத்தின் திட்டத்தில் தமது சொந்தப் பேறுநிறை வாழ்வைப் பகிர்பவனாகச் செய்யத் தன்னிச்சையாக மனிதனைப் படைத்தார். இந்த காரணத்தால், எல்லா காலத்திலும் எல்லா இடத்திலும், கடவுள் மனிதனை நெருங்கி வருகிறார். அவரைத் தேடவும், அவரை அறியவும், தமது முழு வலிமையோடு அவரை அன்பு செய்யவும் அவர் மனிதனை அழைக்கிறார்.”

5. கடவுள் முதல் பெற்றோரைப் படைத்த பொழுது, அவர் அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அவர் ஆதாம், ஏவாளுக்கு ஆசி வழங்கி, அவர்கள் மண்ணகம் முழுவதற்கும் தலைவர்களாக இருந்து தாவரங்களில் இருந்து தங்கள் உணவைப் பெற்றுக் கொள்ளச் சொன்னார் (தொடக்க நூல் 1:26-30). பின்னர் கடவுள் ஆதாமிடம் கீழ்ப்படிதலுடன் இருக்குமாறு கேட்டு, நன்மை தீமை அறியச் செய்யும் மரத்தில் இருந்து உண்ணக்கூடாது என்றார் (தொடக்க நூல் 2:15-17). அது தலைமைத்துவத்தின் ஓர் உடன்படிக்கையாக இருந்தது.

ஓர் உடன்படிக்கை என்பது மக்களுக்கு இடையே, அல்லது கடவுள் மற்றும் அவரது மக்களின் இடையே ஒரு தரப்பினரை மற்றொருவருடன் பிணைக்கின்ற வாக்குறுதிகளைப் பரிமாறுவதாக இருக்கிறது. நித்தியம் அனைத்தில் இருந்தும் கடவுளது அன்பு வடிவமைப்பின்

அடிப்படையாக உடன்படிக்கை இருக்கிறது. மனிதகுலத்தின் எவ்விதத் தேவையும் இல்லை என்றாலும், திருமண பிணைப்பின் நெருக்கத்தின் வழியாக கடவுள் தம்மை மனிதகுலத்தோடு தன்னிச்சையாகப் பிணைத்துக் கொண்டார். ‘‘திருமண’’ இயல்பு கொண்ட ஓர் ஒன்றிப்பை ஓர் உடன்படிக்கை கொணர்கிறது. ஓர் உடன்படிக்கை ஒரு குடும்பத்தை உருவாக்குகிறது.

6. தொடக்க நூலில் படைப்பின் தொகைவுகளை இன்னும் வாசித்தால், வேறுபட்டு காணப்படும் படைப்பின் இரண்டு தொகைவுகளை நாம் கண்டறியலாம். 1:1 முதல் 2:3 வரை ஒன்று, மேலும் 2:4 முதல் 3:24 வரை மற்றது. மனித ஆணும் பெண்ணும் இறுதியாக ஆறாம் நாளில் படைக்கப்பட்டனர், மேலும் ஏழாம் நாளில் கடவுள் ஓய்ந்திருந்தார் என்று முதல் தொகைவு நமக்கு கூறுகிறது. கடவுள் முதலில் மனிதனை, பிறகு தாவரங்கள் மற்றும் விலங்குகளை, மேலும் இறுதியாகப் பெண்ணைப் படைத்தார் என்று இரண்டாம் தொகைவு நமக்கு கூறுகிறது. இந்த தொகைவை எழுதியவர் படைப்பின் நிகழ்வை ஒரு தொடர்ச்சியாகத் தரவில்லை என்பதைக் காட்டுகிறது. மாறாக, கடவுளின் படைப்புச் செயல் குறித்த விசுவாசம் சார்ந்த இரண்டு கருத்துகளை வெளிப்படுத்த அவர் முயல்கிறார்.

முதல் தொகைவு, கடவுள் எல்லாம் வல்லவராக இருக்கிறார் மற்றும் அவர் அனைத்தையும் தமது விருப்பத்திற்கு ஏற்ப அதன் தகுந்த வரிசையில் படைக்கிறார் என்பதை வாசகருக்கு வெளிப்படுத்துகிறது.

நீங்கள் இரண்டாம் தொகைவை வாசித்தால், படைப்புக் கதை விரைவில் மனித தவறுதல் மற்றும் வீழ்ச்சியின் தொகைவுக்கு இட்டுச் செல்கிறது என்பதை நீங்கள் உய்த்துணரலாம். இரண்டாம் தொகைவு, கடவுளுடனான நமது உடன்படிக்கையை மனிதர்கள் முறித்தப் பிறகு கடவுள் தமது படைப்பை எப்படி கைவிடாமல் இருக்கிறார் என்பதைக் காட்ட எழுதியவரால் புனையப்பட்டுள்ளது.

7. உலகம் பல கோடி ஆண்டுகள் வயதுடையது என்று அறிவியலாளர்கள் நம்புகின்றனர், அதே வேளையில் உலகம் சில ஆயிரம் ஆண்டுகளே வயதுடையது என்று நம்பும் மக்களும் இருக்கின்றனர். உலகம் எத்தனை வயதுடையது என்பது ஒரு பொருட்டன்று, இந்த பிரபஞ்சம் முடிவான வயதைக் கொண்டுள்ளது என கத்தோலிக்கத் திருச்சபை நம்புகிறது, நித்தியத்தில் இருந்தே அது இருக்கவில்லை என்பதே அதன் பொருள். ஆனால் இந்த உலகம் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்போ அல்லது பல கோடி ஆண்டுகளுக்கு முன்போ படைக்கப்பட்டது என திருச்சபை உறுதியாக வரையறுக்கவில்லை.

8. கடவுள் முதல் தலைமுறை மனிதகுலம் முழுவதையும் படைக்காமல் (‘‘பல மரபுயிரிவாதம்’’ எனப்படும் கொள்கை), ஓர் ஆணையும் ஒரு பெண்ணையும் மட்டுமே படைத்தாரா (‘‘ஒரு மரபுயிரிவாதம்’’ எனப்படும் கொள்கை) என்று சில மரபியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். மனிதர்கள் அனைவரும் ஒற்றை இணை மனிதப் பெற்றோரில் இருந்து வந்திருப்பதற்கான சாத்தியத்தை பலரும் மறுக்கின்றனர்.

கத்தோலிக்கத் திருச்சபை, ஓரிணை மனிதப் பெற்றோர்களில் இருந்தே மற்ற அனைத்து மனிதர்களும் பிறந்தனர் என்று கொள்கிறது (12-ம் பியுஸ், மனித இனம், 1950). ஆதாம் மற்றும் ஏவாளின் வழித்தோன்றல்களாக அல்லாத மனிதர் எவரும் இந்த மண்ணக முகத்தின் மீது இல்லை. மனித இனம் முழுவதும் ஒரே தொடக்கத்தைக் கொண்டுள்ளது என்பதை புனித மறைநூல் நமக்கு காட்டுகிறது. இன்றைய மனிதர்கள் கொண்டுள்ள வேறுபட்ட உடல்சார் அம்சங்கள், வடிவங்கள், மற்றும் நிறங்கள் ஆகியவை காலநிலைகள், வழக்கங்கள், மற்றும் பிற இயற்கை காரணங்களால் கால ஓட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பதே உண்மை.

ஆதாமும் ஏவாளும் வேறுபல மகன்களையும் மகள்களையும் கொண்டிருந்தனர் (தொடக்க நூல் 5:4). அக்காலத்தில், உடன்பிறந்தோர் ஒருவர் மற்றவரை திருமணம் செய்வது (அதாவது, தகாத உறவு) தவறானதாக இல்லை. உடன்பிறந்தோருக்கு இடையிலான திருமணம் அந்த காலத்தில் கெட்ட மரபணுக்களை உரிமையாக்கும் அபாயத்தைக் கொண்டிருக்கவில்லை, மேலும் கெட்ட மரபியல் மாறுபாடுகளைப் பெறுவதற்கு பல தலைமுறைகள் எடுத்தன. இதனால்தான் மோசே காலத்தின் தொடக்கத்தில் இருந்தே தகாத உறவு தடை செய்யப்படுவதை நாம் விவிலியத்தில் காண்கிறோம் (லேவியர் 18:6). அதற்கு முன்பாக ஆண்கள் தங்கள் உறவினர்களை திருமணம் செய்ததற்கான பல எடுத்துக்காட்டுகளை நாம் காண்கிறோம்: ஆபிரகாம் தமது அரை சகோதரி சாராவைத் திருமணம் செய்தார் (தொடக்க நூல் 20:12; 17:15-16; 22:17); ஆபிரகாமின் மகன் ஈசாக்கு தமது இரண்டாங்கால் உறவினரான

ரெபேக்காவை மணந்தார் (தொடக்க நூல் 22:20-23; 24:4,15); ஆபிரகாமின் பேரன் யாக்கோபு தமது முதற்கால் உறவினர்களான ராகேல் மற்றும் லேயாவைத் திருமணம் செய்தார் (தொடக்க நூல் 24:29; 29:15-30); மேலும் மோசேயின் தந்தை அம்ராம் தமது தந்தையின் சகோதரியான யோக்கபேதைத் திருமணம் செய்தார்.

9. இன்று நாம் இருக்கிறது போன்ற இறுதி வடிவத்தில் மனிதர்கள் தொடக்கத்திலேயே படைக்கப்படவில்லை, வேறுபட்ட நிலையில் இருந்து நூற்றாண்டுகளின் பரிணாம வளர்ச்சியின் விளைவாகவே நாம் இருக்கிறோம் என்று நம்பும் அறிவியலாளர்களும் இருக்கின்றனர். இந்த நம்பிக்கை ஏற்புடையதா?

முதலில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம், இருக்கின்ற அனைத்தையும் படைத்த ஒருவர் கடவுளே, மேலும் அவர் ஒன்றுமில்லாமையில் இருந்து படைத்துள்ளார்.

இரண்டாவது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம், கால ஓட்டத்தில் வேறுபட்ட உயிர் வடிவத்தில் இருந்து நிகழ்ந்த உருவாக்கத்தின் விளைவாக மனிதர்கள் இருந்தாலும், இந்த உருவாக்கம் படைத்தவரான கடவுளின் உந்துதல் மற்றும் வழிகாட்டலின் கீழ் நிகழ்ந்தது. (இருப்பினும், வேறுபட்ட உயிர் வடிவத்தில் இருந்து பரிணாமத்தின் விளைவே உண்மையில் மனிதர்கள் என்பதற்கான அறிவியல் சான்று எதுவும் இல்லை.)

மூன்றாவது முக்கியக் கருத்து, மனித உடல் முந்திய உயிரியல் வடிவங்களில் இருந்து கடவுளின் வழிகாட்டலில் உருவாகி இருந்தாலும், மனித ஆன்மா கடவுளின் ஒரு சிறப்பு படைப்பாகவும், மற்றொரு வடிவத்தில் இருந்து பரிணமிக்காத அல்லது உருவாகாததாக இருக்கிறது. நமது முதல் பெற்றோரிடம் இருந்து நாம் பெற்றுக்கொண்ட மனித உடல் பரிணமித்து இருக்கலாம், ஆனால் மனித ஆன்மா கடவுளால் நேரடியாகப் படைக்கப்பட்டது, மேலும் நமது முதல் பெற்றோரிடம் இருந்தும் பெறப்படாதது.